செ.கு. எண்', 78

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 20.2.2012

ஈரோடு மாவட்டம் ஆயுதப் படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.பாலகிருஷ்ணன் மற்றும் திரு. S.N. ரமேஷ் ஆகிய இருவரும் 19.2.2012 அன்று பணியினை முடித்து விட்டு இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சத்தியமங்கலம் - அத்தாணி S.R பெட்ரோல் பங்க் அருகில் எதிரே வந்த அடையாளம் தெரியாத வாகனம் மோதி காவலர் ரமேஷ் சம்பவ இடத்திலேயும், காவலர் பாலகிருஷ்ணன் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும், உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

காவலர்கள் திரு. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. ரமேஷ் பணியில் இருக்கும் போது காலமானார்கள் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. பாலகிருஷ்ணன் மற்றும் ரமேஷ் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் விபத்தில் காலமான காவலர்கள் திரு. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. ரமேஷ் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்